# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 91/10 — 1973 දෙසැම්බර් 28 වැනි සිකුරාදා — 1973.12.28
91/10 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.அ. எண்: சி.349/72.

**இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பும்,**
**1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையும்**

தேசிய அரசுப் பேரவையில், மன்னார் உறுப்பினரின் ஆசனம் வெறுமையாக இருக்கிறதென்று, இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் 36 (2) ஆம் பிரிவின் கீழ்த் தேசிய அரசுப் பேரவையின் எழுத்தாளரால், 1973 நவெம்பர் மாதம் 29 ந் தேதியிட்ட கடிதமூலம் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதால் ;

இப்பொழுது, இலங்கைக் குடியரசின் சனாதிபதி, வில்லியம் கொபல்லவ ஆகிய யான், மேலே குறிப்பிட்டுள்ள பிரிவினாலும், 1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 27 ஆம் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இவ்வறிவித்தலின் வாயிலாக—

(1) முன்னே கூறப்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒரு தேர்தலை நடாத்தும்படி கட்டளையிடுகிறேன், அத்துடன்

(2) அத்தகைய தேர்தலுக்கு வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமனஞ் செய்வதற்கான தேதி 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ம் தேதி எனவும் அதற்கான இடம் மன்னார் கச்சேரி எனவும் குறிப்பிடுகிறேன்.

**வி. கொபல்லவ,**
சனாதிபதி.

கொழும்பு,
டிசெம்பர் 28, 1973.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது